பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(09.11.2024 முதல் 13.11.2024 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 090 (11) PJN/GKMS/2024 தேதி: 08.11.2024

### காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (03.11.2024 முதல் 07.11.2024 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -13.11.2024 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03/11 | 04/11 | 05/11 | 06/11 | 07/11 | | நாள்-1 09/11 | நாள்-2 10/11 | நாள்-3 11/11 | நாள்-4 12/11 | நாள்-5 13/11 |
| 0 | 2.6 | 2.0 | 0.0 | 26.80 | மழை (மி.மீ) | 24 | 29 | 26 | 27 | 25 |
| 33 | 32 | 32 | 33 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 25 | 24 | 22 | 21 |
| 25 | 24 | 25 | 24 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 24 | 24 | 21 | 21 | 20 |
| 4 | 5 | 4 | 4 | 7 | மேக மூட்டம் | 8 | 8 | 8 | 8 | 8 |
| 79-90 | 75-92 | 67-92 | 72-92 | 83-92 | ஈரப்பதம் (%) | 70-80 | 60-80 | 70-80 | 70-80 | 70-90 |
| 3 | 2 | 2 | 2 | 3 | காற்றின் வேகம் (கி.மீ) | 20 | 22 | 24 | 18 | 12 |
| வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | காற்றின் திசை | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு | வடக்கு வட கிழக்கு | வட கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (09.11.2024 முதல் 13.11.2024 வரை):**

நவம்பர் 09 லிருந்து 13 வரை மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 20-27 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 60-90 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 12-24 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் வடக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| தற்போது நிலவும் வானிலையானது பின்வரும் பூச்சிகளின் தாக்கத்திற்கு சாதகமாக உள்ளதால் பூச்சியின் கடுமையான தாக்குதல் கண்டறியப்பட்டால், அந்தந்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுக்கலாம். | | |
| நெல் | களை மேலாண்மை | நெல்லில், களை மேலாண்மைக்கு ஹெக்டருக்கு பயிர் விதைத்து 10-12 நாட்களுக்குள் பின் பிஸ்பிரிபாக் சோடியம் (Bispyribac sodium) 200 கிராம் அல்லது பயிர் விதைத்து 12-15 நாட்களுக்குள் பின் சைஹலோஃபாப்-பியூட்டைல் (Cyhalofop-butyl) 350 கிராம் அல்லது பைரசோசல்ஃப்யூரான் ஈதைல் (Pyrazosulfuron ethyl) 200 கிராம் அல்லது பயிர் விதைத்து 30-50 நாட்களுக்குள் பின் 2,4-டி (2,4-D) 1.25 கிலோ என்ற அளவில் பயன்படுத்தி களைகளைக் கட்டுப்படுத்தலாம். |

| | | |
|---|---|---|
| நெல் | முள் வண்டு / ஹிஸ்பா வண்டு | தாக்குதலின் அறிகுறிகள்<br><br>நெல்லில் ஹிஸ்பா வண்டுகளை கட்டுப்படுத்த கார்டாப்ஹைட்ரோகுளோரைடு 50% எஸ்பி 1000 கிராம் தெளிக்கவும். |
| நெல் | குருத்துப் பூச்சி | நெற் பயிரில், குருத்துப் பூச்சிகளை கட்டுப்படுத்த, டிரைக்கோகிராமா ஜப்பானிக்கம் ஒட்டுண்ணிகளை ஹெக்டருக்கு 1,00,000 (நடவு நட்டபின் 37, 44 and 51 நாட்களில்) பயன்படுத்தலாம் அல்லது லிட்டருக்கு 4 மி.லி அசாடிராக்டின் (0.03 %) அல்லது கார்டேப்ஹைட்ரோகுளோரைடு (cartaphydrochloride 50% SP) லிட்டருக்கு 2 கிராம் அல்லது ஃப்ளுபென்டையமைடு (flubendiamide 20 WG) லிட்டருக்கு 0.25 கிராம் அல்லது தையமீதாக்சம் (thiamethoxam 25 WG) லிட்டருக்கு 0.2 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம். |
| கால்நடை | ரத்தக்கசிவு செப்டிசீமியா | ரத்தக்கசிவு செப்டிசீமியா நோய் கால்நடைகளுக்கு பாக்டீரியா கிருமிகளால் ஏற்படுகிறது. இது பொதுவாக மழைக்காலத்தில் ஏற்படும் . எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நோயைத் தடுக்க மழைக்கு முன்பாகவே தடுப்பூசி அளித்து நோயின் தாக்குதலைத் தடுத்து கால்நடைகளை பாதுகாக்கவும். |
| | தைலீரியோசிஸ் | தைலீரியோசிஸ் என்ற நோய் கலப்பின மற்றும் வெளிநாட்டின மாடுகளைத் தாக்கி பாதிப்பை ஏற்படுத்தும் நோயாகும்.இந்நோய் ஹைலோமா எனும் உண்ணிகளால் பரவுகிறது. உண்ணிகளின் இனப்பெருக்கத்திற்கு ஏற்ற இடங்களான கால்நடைகளின் சாணம், கால்நடைக் கொட்டகைகளிலுள்ள இருண்ட ஈரமான மூலைகள், தேங்கியிருக்கும் தண்ணீர் போன்றவைகளிலும் கால்நடைக் கொட்டகைகளின் மூலை முடுக்குகள், சுவர் இடுக்குகள் மற்றும் மரப்பொருட்களின் இடுக்குகளில் அப்பூச்சிகளால் இடப்படும் முட்டைகளையும் அப்புறப்படுத்தி சுத்தமாக வைத்திருந்து இந்நோயிலிருந்து கால்நடைகளை பாதுகாக்கவும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதால் பயிர்களுக்கு வடிகால் வசதி அளிக்கவும்.

**முதல்வர்**